சார்பு நீதிமன்றம். அருப்புக்கோட்டை.
முன்னிலை: திரு.R.சதீஷ், M.L.,
சார்பு நீதிபதி. அருப்புக்கோட்டை.
2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**அ.வ.எண்.65/2026**

CNR.No.TNVR13-000262-2026

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், பாலையம்பட்டி, திருக்குமரன் நகர் 5வது தெரு, கதவு எண்.1/42/28/1 என்ற முகவரியில் வசித்து, தற்சமயம் கோவில்பட்டி – 628 501, மந்தித்தோப்பு ரோடு, ராம் சரஸ்வதி நகர், கதவு எண்.691-C/6 என்ற முகவரியில் வசிக்கும் N.குருசாமி மகன், சுமார் 58 வயதுள்ள G.முருகன்.

... வாதி

– எதிர் –

சென்னை-91, புழுதிவாக்கம் மெயின் ரோடு, புழுதிவாக்கம் பூஜா அபார்ட்மெண்ட், முதல் தளம், கதவு எண்.37 என்ற முகவரியில் வசிக்கும் K.S.ஜெயராமன் மகன், சுமார் 65 வயதுள்ள சீனிவாசன்.

... பிரதிவாதி

வாதிக்கு பிரதிவாதி செலுத்த வேண்டிய கைமாற்றுக்கடன் ரூ.2,50,000/-ஐ கொடுக்கச் சொல்லி உத்தரவிடகோரியும், பிராது தேதியிலிருந்து பிரதிவாதி செலுத்த வேண்டிய அசலுக்கு 7.5% பின்வட்டி சேர்த்து செலுத்தக்கோரியும் மற்றும் வழக்கின் செலவுத் தொகை கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் நாள் | : | 01.04.2026 |
| நீதிமன்றக் கட்டணம் | : | தாவா வழக்கு தொகை ரூ.2,50,000/-க்கு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டண சட்டம் பிரிவு 22-ன் படி ரூ.7,500/-ஐ நீதிமன்றக் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. |
| வழக்கு மூலம் | : | 13.10.2025, 15.10.2025, 15.11.2025, 31.01.2026, 02.02.2026 மற்றும் 26.02.2026 ஆகிய தேதிகளில் அருப்புக்கோட்டை தாலுகா, பாலையம்பட்டி கிராமத்தில் வைத்து உற்பத்தி. |

இவ்வழக்கு 19.06.2026 ம் தேதி அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பி.தேரிராஜன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் யாரும் ஆஜராகாததால் அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையிலும், மேலும், வாதி தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

தீ ர் ப் பா ணை

1. வழக்கு அனுமதிக்கப்படுகிறது.
2. வாதிக்கு பிரதிவாதி செலுத்த வேண்டிய தொகை ரூ.2,50,000/-ம், மேற்படி தொகை ரூ.2,50,000/-க்கு பிராது தேதி முதல் தீர்ப்பாணை தேதி வரை ஆண்டுக்கு 7.5% வட்டியும், தீர்ப்பாணை தேதி முதல் தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை ஆண்டுக்கு 6% வட்டியும் வழங்க வேண்டும்.
3. செலவுத்தொகை இல்லை.

செலவுத் தொகை விபரம்
(இருதரப்பிலும் செலவுத்தொகை விபரம் தாக்கல் இல்லை)

2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19 ஆம் நாளன்று என்னுடைய கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

SATHISH Digitally signed by SATHISH

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

---------------------

**தீ ர் ப் பா ணை**
OS.**No.65/2026**
நாள்: 19.06.2026
சார்பு நீதிமன்றம்,
அருப்புக்கோட்டை

---------------------